நீதி

மாலை 3 | திருவள்ளுவர் ஆண்டு 1999 வைகாசி—ஜூன் 1966 | மணி 8

நீதி வழங்கப்படுமா?

இந்திய அரசினர் சுகாதார அமைச்சர் அலுவலகத்தில், இந்திய மருத்துவ ஆலோசகர் என்ற ஒரு பதவியிருக்கிறது. இந்தப் பதவியை தற்போது வகித்து வருபவர் டாக்டர் சி. துவாரகநாத். இவர் தமிழகத்தைச் சேர்ந்தவர். சென்னை அரசினர் முன்னாள் இந்திய மருத்துவப் பள்ளியில் படித்துப் பட்டம் பெற்றவர். இன்னும் சில மாதங்களில், இவர் பதவியி விருந்து ஓய்வுபெற விருக்கிறார். இவருடைய இடத்தில் தகுதியுள்ள ஒருவரை நியமிக்கும் நோக்கத்துடன், விண்ணப்பங்கள் கோரி, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியுள்ளது. அந்தப் பதவிக்கு யோக்யதாம்சங்களைக் குறிப்பிடுகையில், ஆயுர்வேதப் பட்டம் பெற்றவர்களைப் பற்றி மட்டும்தான் தெரிவித்துள்ளது. நாட்டு மருத்துவம் அல்லது இந்திய மருத்துவம் என்று சொல்லுமிடத்தில் ஆயுர் வேதம், சித்தா, யுனானி இம் மூன்றையும் குறிக்கும். இதனை விடுத்து ஆயுர்வேதப் பட்டம் பெற்றவர் மட்டுமே ஆலோசகர் பதவிக்கு விண் ணப்பிக்கலாம் என்று சொல்வது, மற்றிரு வைத்திய முறைகளுக்கும பாரபட்சம் காட்டுவதாகும். சித்தா யுனானி வைத்தியப் பேராசிரியர்கள், மற்றும் உயர்ந்த பட்டம் பெற்றவர்கள், இந்திய வைத்தியங்களில் அனுபவம் பெற்றவர்கள், நிர்வாகத் திறமை யுள்ளவர்களையும் விண்ணப் பிக்கும்படி அனுமதிப்பதுதான் நீதியாகும். நாடெங்கும் ஒரே மாதிரியான கொள்கையைக் கடைப்பிடித்து எல்லோருக்கும் சமநீதி வழங்க வேண் டியது தான் ஜனநாயகமாகும்.

மூன்றுவித வைத்திய முறைகளுக்கும் மூன்று ஆலோசகர்கள் நியமிப் பதும் தவறில்லை.

ஆகவே, இந்திய அரசினர் உடனே, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். தமிழக அரசினரும் இதனை மத்திய அரசினரிடம் வற்புறுத்த வேண்டும். இது விஷயமாக தேவைப்பட்டால் சாத்விக முறையில் பெரியதொரு கிளர்ச்சியை நடத்த சித்த வைத்தியர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

நோயாளியை சோதனை செய்யும் முறை

(டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி, ஐ. எம்.
தமிழக அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரித் தலைவர்)

(முன் இதழ் தொடர்ச்சி)

பக்கவாத நோயில் கேள்விகள்

(1) இரத்தாசயத்தைப் பற்றியும், இரத்தக் கொதிப்பு, இரத்த அழுத்தம் முதலியவற்றை ஆராய்தல், நீரிழிவு நோயை விசாரித்தல், *(2) பக்க வாதம் வருவதற்கு முன் முற்குறிகள் யாதாகிலும் உண்டா?*

புகை சம்பந்தமான தொழிலா? ரசாயனப்பொருள் சம்பந்தமா? தொழிற்சாலையில் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள்? உடை? ஐம்பொறிகளின் தற்காப்புகள்?

தலைமுதல் கால்வரை குறிப்பேடு தேர்வு

பொது:—உடல் தோற்றம்.

(1) அறிவு-கூர்மை, தெளிவு, மந்தம்.

(2) ஒத்துழைப்பு—

[3) நோயின் வரலாறு கூறுதல்

(4) உடல் நிலை-படுத்திருத்தல், நிற்றல், உட்கார்ந்த நிலை.

(5) உடல் கட்டு அல்லது பலம்.

உடல் உட்டிணம் —

நாடி நடை —

தோல் — நீல நிறம், மஞ்சள் நிறம்: வெளுப்பு முதலியன

தோல்நோய்கள் — கொப்பளம், பருக்கள், தழும்புகள் முதலியன

வீக்கம் —

உடற்கயம் —

உடல் பருமன் —

உடல் மயிர் —

உடற் உறுப்பின் குறைவுகள்—

தலை — உருவம், தலைவலி முதலியன,

மயிர் — அதிகம், குறைவு, விழுதல், சுண்டு

கண் — பார்வை; மாலைக் கண் முதலியன

செவி — கேட்டல்; சீழ் வடிதல், வலி

வாய் — நாற்றம்; உதடு; நாக்கு; பல்; பல் ஈறு; தொண்டை குறல்வளை.

கழுத்து ; கழலை வீக்கங்கள் ; கார் இரத்த அழுத்தம் : கழுத்து அசைவு ; கழுத்து நசை அசைவு ?

முழங்கை — நாடி— இரத்த அழுத்தம்—உள்ளங்கை—நகம்—
நசை நாரின் வேகங்கள் —
உணர்ச்சி —
செயல்கள் —
கீல்கள் —

மார்பு :

மார்பறையின் உருவம், தோற்றம் —
சுவாசத்தின் அளவு, காலம், குணம் —
இருதயம் —

(1) இருதய நுனி துடிப்பு

(2) உள்ளங்கை தேர்வு —
(3) விரலடி தேர்வு —
(4) செவிபுலன் தேர்வு —

நுரைசரல் :

(1) உள்ளங்கை தேர்வு —
(2) விரலடி தேர்வு —
(3) செவிபுலன் தேர்வு —

முதுகு :

(1) முதுகெலும்பு - அசைவு ; வளைவு ; வலி ;

தொந்தி :

(1) பார்வை தேர்வு-உருவம், பருமன், உப்பல் சமம் ; அசைவு; புண் சுவடு ; தொப்புழ் ; இரத்த ஓட்ட அசைவு ; குடல் முறுக்கல்; குடல் வாதம்.

(5) உள்ளங்கை தேர்வு - சினக்கல் வலி; கனம்; பொருமி உப்புதல் ; சமானம் ; தொந்தி நசை அசைவு; புண்வடு; தொப்புழ்; குடல் முறுக்கல் நாடி அசைவு; கழலைகள் ; நீர் அசைவு ; கல்லீரல்; மண்ணீரல்; நீர் குண்டிக்காய்.

விரலடி தேர்வு—தேவையானால் இத்தேர்வு உபயோகிக்கலாம்.
செவிபுலன் தேர்வு " "
அறை ஞான் கழலைகள் —
ஆண் குறி —
தொந்தி வேகங்கள் —

மலவாய் ஆய்தல் —
கருவாய் ஆய்தல் —
கை, கால்கள் ;
பொது தேர்வு
வீக்கம் — அழுத்தம்
வன்மை—பலம்; தசை அசைவு; தசை வேகங்கள்; உணர்ச்சி;
ஒத்துழைப்பு ;
நீர் தேர்வு.
மலத் தேர்வு.
சளி வேர்வு.
வாந்தி தேர்வு ;
நோயின் நிதானம் ;
நோயின் முடிவு ;
பரிகாரம் ;

(தொடரும்)

"நந்தி"க்கு நன்கொடை

சித்த வைத்தியர் எஸ். அப்பி, ஹோசூர் (தம் நண்பர் களிடம் வசூலித்து அனுப்பியது) ரூ. 35 00
" ம. முத்துகிருஷ்ணன், முசிறி. ரூ. 5 00

"நந்தி"க்கு வாழ்த்து

சித்த மருத்துவத்தின் தொன்மை புகழ் வளர்த்தே
நத்து பிணிபோக்கும் நாயகனும்—வித்தார
சுந்தரானந்தர் துணையால் முகிழ்ந்து
வரும் நந்தியே வாழ்க நயந்து !

—மதுரகவி முருகேசனார்

சித்த வைத்திய சிறப்பு மருந்துகள்

புது உருவம்

கூஷ்மாண்ட் அல்வா

சரீர புஷ்டி உண்டுபண்ண
மனக்கவலை போக்க
உடல் சூட்டை தணிக்க
உற்சாகம் காட்ட

காற்றுப் போகா டின்களில் வெண்பூசணி
மற்ற சரக்குகளும் சேர்க்கப்பட்ட அல்வா.

450 கிராம் டின் ரூ. 4-80

ஸ்பெஷல் பர்ஃபி

தேங்காயின் சத்தும், ஊட்ட சத்துக்களும் சேர்த்து கேக் மாதிரி தயாரிக்கப்பட்டது. ஜீரண சக்தியை வலுப்படுத்தி நரம்புகளுக்கு ஊட்டமளிக்கும்.

450 கிராம் டின் ரூ. 4-80

வாழைத்தேன்

சித்த வைத்தியத்தின் சிறப்பு உணவு ஊட்ட சத்துக்களுடன் கூட டியூப்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.

150 கிராம் டியூப் ரூ. 1-95

டாக்டர் நிவாஸ் கெமிக்கல்ஸ்,

பார்மசூடிகல் மானுபாக்சரர்ஸ், நியூ·ட்ரீமெண்ட்ஸ்,
32, கமலாலயம் வடகரை,
திருவாரூர்.

த. பெ. எண். 19 (தஞ்சை மாவட்டம்) தொலைபேசி. 142

ஒரு நல்ல வாய்ப்பு

உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தினருக்கோ, நண்பர்களுக்கோ, தீராத நோயினால் துன்பம் ஏற்பட்டு, பல சிகிச்சைகள் செய்தும், பலன் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தால்—

நோயாளியின் வயது, திருமணம் ஆனவரா, குழந்தைகள் உண்டா, நோய் வந்த விவரம், காலம், செய்து கொண்ட சிகிச்சை, முதலிய விவரங்களை, தெளிவாகத் தமிழில் எழுதியனுப்பவும்.

குணம் அளிக்கக் கூடிய இலகுவான சிகிச்சை, நீங்களே மருந்தை தயாரித்துக்கொள்ள ஆலோசனை முதலிய விவரம் தபாலில் அனுப்பப்படும். சிகிச்சை முறை தெரிவிக்க கட்டணம் இல்லை. வைத்திய நிபுணருடைய ஆலோசனை இலவசம்.

ஆனாலும், எழுத்துக் கூலி, தபால் செலவு முதலியவற்றிற்காக, உங்கள் கடிதத்துடன் ரூபாய் இரண்டு மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். அங்ஙனமில்லாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

○

கடிதம், மணியார்டர் அனுப்ப முகவரி:

வழி நடைச்சித்தன்

C/o "நந்தி" பதிப்பகம்

9, கஜபதி நாயுடு தெரு, சென்னை 30

பயிர் நூல்

('தேவன்')

நான் முகம்

தமிழ்ப் பெருங் குடியினர் கலை, அறிவியல் ஆகியவற்றின் பல்வேறு துறைகளையும் மிகப் பழங்காலந் தொட்டே ஆராய்ந்தறிந்திருந்தனர். இவ்வாறு இவர்களால் ஆராயப்பட்டவற்றுள் மருத்துவம், இசை, அளவை போன்ற சில தவிர, ஏனைய தனித் தனி நூற்களாக அமைக்கப்படாதிருந்தன. ஏனெனில் பொருளியல், உடலியல், உளவியல் போன்ற அறிவியல்களனைத்தையும் இவர்கள் தம் வாழ்க்கையோடு பிணைத்து வாழ்ந்ததாலேயாம். எனவேதான் தமிழர் சமுதாய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளான தமிழிலக்கியங்களில் பயிரியல், விலங்கியல், அளவையியல், சிற்பவியல், வாழ்வியல், உடலியல், உளவியல் முதலானவை மலிந்து காணுகின்றன.

மக்கள் வாழ்க்கை அமைப்பில் முதன் முதலில் பயிர்ப்பொருட்களே முக்கிய உணவாயின. இதனால் தாவரங்களின் இலை, பூ, காய், கனி, வித்து, ஆகியவை வெகுவாகப் பயன்பட்டன. இவற்றுள் எவ்வெவை உகந்தனவெனவும், எவ்வெவை ஒவ்வாதன வெனவும் இவர்கள் பகுத்தறிந்தனர். பின்னர் ஒவ்வொரு பொருளும் மற்றப் பொருளினின்று வேறுபட்ட குணமுடையதைக் கண்டு, அவற்றை நோய் தீர்க்கும் மருந்துகளாகப் பயன் படுத்தினர். இவ்வாற்றான் பயிர்களும் பயிர்ப் பொருட்களும் மக்கள் வாழ்வில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றன.

பண்டைக்கால மக்கள் தாவரங்களில் பெருமளவைத் தெரிந்திருந்தனர். இதனால் அவர்களுக்கு முறையாகப் பாகுபாடு செய்யப்பட்ட பயிரியல் நூல் தேவைப்படவில்லை, ஆனால் இன்று நாம் அறிந்த தாவரங்கள் மிகச் சில. பல தாவரங்களைக் கண்டிருந்தும் அவற்றின் பெயர்கூட நமக்குத் தெரிவதில்லை. சில மூலிகைகளுக்கு ஒரு பகுதியில் வழங்கும் பெயர் இன்னொரு பகுதியில் வழங்குவதில்லை. எனவே தெரியாத பயிர்களைத் தெரிந்து கொள்ள முறையாக பாகுபடுத்தி வரையறுக்கப்பட்ட பயிர் நூல் அறிவு தேவைப் படுகிறது.

தமிழகத்தின் பயிர்நூல் தந்தை இளங்கோவடிகள் எனலாம். சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் பயிர்கள் தொகை தொகையாகக் கூறப்படுகின்றன. பல இனங்களில் இத்தொகைகள் ஒரே வகுப்பைச் சேர்ந்த தாவரங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதொன்று. மேலும் பழங்காலந் தொட்டே பயிர்களை நம் முன்னோர் காளான், பாசி, புல், பூண்டு, செடி, கொடி, மரம் என வகுத்து வழங்கியமை அவர்தம் பயிர்நூலறிவிற்குச் சிறந்ததொரு சான்று. எனினும் பின்னால் பயிரியலறிவு வளர்ச்சியுறாது நின்று விட்டது. பயிர்களை வகைப்படுத்தி அறிவதற்கு உதவுமாற்றானும், மருந்துப் பயிர்களின் இயலை விளக்குமாற்றானுமே இந்நூலெழுதும் முயற்சி தொடங்கப்பட்டது.

இந்நூல் மேனாட்டு பயிர்நூல் வல்லுனர்களின் கோட்பாட்டைத் தழுவியேயுள்ளது. எனினும் உணர்த்துச் சொற்களும், சொற்றொடர்களும் பெரும்பாலும் தமிழில் வழக்கில் உள்ளனவும், இல்லாதவற்றுக்கு தமிழில் ஆக்கப்பட்டனவுமேயாம். இப்பெரு முயற்சியில் பிழைபல மலிந்திருக்கும். குற்றம் பாராட்டாது, பிழையும் மாற்றம் சுட்டிச் சிறியேனைத் திருத்துமாறு பணிகிறேன்.

உயிரும் அறிவும்

மேனாட்டு அறிவு நூலார் பயிர்களுக்கும் விலங்குகளுக்கும் உயிருண்டெனவும், கல், மண், நீர், காற்று, தீ, இரும்பு போன்றவற்றிற்கு உயிரில்லை எனவும் கூறுவர். ஆனால் பழந் தமிழ் ஆகம வாதிகளின் கொள்கை இதுவன்று. உலகும், உலகப் பொருட்களும் அணுக்களாலாயது என்று தமிழர் கண்டிருந்தனர். ஒவ்வொரு அணுவிலும் உயிர் உண்டு என்பதே ஆகம வாதிகளின் கொள்கையாதலால் அணுக்களாய பொருட்களனைத்தும் உயிருடையன. இவ்வுயிர் சலனமடையும்போது அதனை அறிவு என்றனர். இதனால் உயிர் சலனமடைந்தவை அறிவுள்ளவை எனவும் உயிர் சலனமுறாதவை அறிவற்றவை எனவும் கொள்ளப்பட்டன. உயிரின் சலனம் பல நிலைகளில் காணும். இது அவத்தை எனப்படும். இவ்வவத்தைகள் ஐந்து. அவை, நனவு, கனவு, துயில், உறக்கம், பேருறக்கம் என்பன. இவ்வவத்தை நிலைகட்கேற்ப அறிவு ஒன்று முதல் ஆறுவரை காணும்.

அறிவற்ற பொருட்களில் உயிர் உறக்க நிலையில் காணுமெனவும், அறிவுள்ள பொருட்களில் தாவரங்கள் துயில் நிலையிலும், விலங்குகள் கனவு நிலையிலும், மக்கள் நனவு நிலையிலும் உயிர் செயல்படக் கொண்டவை யெனவும் கூறுவர்.

தாவரங்களில் உயிர் துயில் நிலையிற் காணுவதால் இவற்றுக்கு மெய்யுணர்வு என்ற ஓரறிவு மட்டுமே உண்டு.

அறிவுள்ள பொருட்களில் சம்சாரி சீவன்கள் எனப்பட்டன. இது தாவர சம்சாரி சீவன், சங்கம சம்சாரி சீவன் என இரண்டாகப் பகுக்கப்படும். தாவர சம்சார சீவன்கள் என்பது தாவரங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கும். தாவரங்கள் இடம் விட்டிடம் நகரா த் தன்மையுடைய மெய்யும் ஓரறிவுள் உள்ள சீவன்கள். காளான், பாசி, புல், பூண்டு, செடி, கொடி, மரம் என்பன இதிலடங்கும்.

பயிர் நூற் பிரிவுகள்

பயிர்களைப் பற்றிக் கூறும் நூற்கள் பல பிரிவுகளாகக் காணும். இவை இயல்கள் எனப்படுகின்றன. அவை கீழே சொல்லப்படுகின்றன.

பயிர் உறுப்பியல் (Morphology) பயிர்களின் வெளி அமைப்பையும் அமைவையும் விளக்கும்.

பயிர்க் கூறியல் (Anatomy) பயிர்களின் உட்பகுதியின் அமைவையும் தன்மையையும் கூறும் பகுதி, இதனை அறிய பெருக்காடி தேவை.

பயிர்த் தொழிலியல் (Physiology) உயிர்ச்சலனமுள்ள பயிர் நடாத்தும் தொழிலை விவரிக்கும் பகுதி.

பயிர்ப் பாகுபாட்டியல் (Taxonomy) பயிர்களைப் பாகுபடுத்தி வகுப்பு, குடும்பம் முதலிய வாகப் பிரித்துக் கூறுவது.

பயிர்ச் சூழலியல் (Ecology) பயிர்களை அதன் சூழ்நிலையுடன் கூறும்பகுதி.

பயிர் நிலவியல் (Plant Geography) பயிர்களுக்கும் நிலங்கட்கு முள்ள தொடர்பை விளக்கும் பகுதி.

பயிர் வளர்ப்பியல் (Horticulture) பற்றிக் கூறுவது.

பயிர் விளையல் (Agriculture) வயல் விளைச்சல் பயிர்கள் பற்றி விவரிப்பது.

பயிர்க் குணவியல் (Materia Medica) மருந்துப் பயிர்களையும் அவற்றின் குணங்களையும் தெளிவாக்கும் பகுதி.

பயிர் நோயியல் (Pathology) பயிர்கட்கு வரும் நோய்கள் பற்றியும் அவை நீக்கும் முறை பற்றியும் சொல்லுவது.

இவை தவிர இன்னும் சில பகுதிகளான பயிர்ப் படிவியல் (Fossil Botany) பயிர்க் காட்டியல் (Forestry) முதலியவும் உண்டு.

பயிர் நூலின் பல இயல்கட்கும் அடிப்படையாக விளங்குவது உறுப்பியலாகும். எனவே இனி முதலாவதாக உறுப்பியல் விளக்கப்படுகிறது.

பயிர்நூல்—உறுப்பியல்

பயிர்களின் இலை, பூ, காய், வேர், தண்டு முதலான உறுப்புகளைப் பற்றிக் கூறும் பயிர் நூற்பிரிவு உறுப்பியலாகும்.

உறுப்பு—1

செடியும் அதன் உறுப்புகளும்

ஏதாவதொரு சிறிய செடியை நிலத்திலிருந்து கவனமாகத் தோண்டி, வேர் அறுந்துவிடாமல் பெயர்த்தெடுத்து, வேர்ப்பகுதியிலுள்ள மண்ணைக் கழுவிப் போக்கிக் கொண்டு அதன் உறுப்புக்களைக் காணலாம். செடி நிலத்தில் நிற்கும்போது தரை மட்டத்

துக்கு மேலே பச்சை நிறமுடையதாக கிளை, இலை, பூ முதலிய வற்றைக் கொண்ட பகுதி தண்டு (Shoot) எனப்படும். மண்ணி னுள்ளே புதைந்துள்ள அழுக்கு நிறப்பகுதி வேர் (Root) எனப்படும்.

வேர்ப் பகுதியின் நடுவாக நிலத்துள் செங்குத்தாகச் செல்லு வது ஆணிவேர் (Tap root) இது மேலேயுள்ள தண்டின் காண்டத் தொடர்ச்சியாகும். இவ்வாணி வேரினின்று பல கிளை வேர்கள் (Branch roots) துன்னி சரிவாகச் செல்லும், இவற்றில் சிறுகிளை வேர்கள் காணும்.

தண்டுப் பகுதியின் நடுவில் செங்குத்தாக வெளி நோக்கும் உறுப்பு காண்டம் (Stem) எனக் கூறப்படும். இளஞ் செடியில் இலைகளும், முதிர்ந்த செடியில் கிளைகளும் இதில் காணும்.

இலைகள் தட்டையான இலைப் பரவை (Lamina or blade) யையும் அதைக் காண்டத்தோடு இணைக்கும் இலைக்காம்பை (Petiole)யும் கொண்டிருக்கும். இலைப்பரவை மேல், கீழ் என இரு பக்கமுடையது. இலைக்காம்பு இலைப்பரவையில் தொடர்பாக ஓடி பல பிரிவுகளுடன் காணும் இவை நரம்புகள் எனப்படும்.

காண்டத்தில் இலைக் காம்பு பற்றியிருக்கும் இடம் சற்று வீங்கிக் காணும். இது கணு (Node), இவ்வாறான இரண்டு அடுத் தடுத்த கணுக்களுக்கு இடையிலுள்ள காண்டத்தின் பங்கு கணு விடை (Internode) ஆகும். காண்டம் பல கணுக்களையும் கணு விடைகளையும் கொண்டிருக்கும். கணுக்களில் சிறிய இலைகள் சில தாவரங்களில் இருக்கும். இவ்விலைகள் கணுவிலைகள் (Stipules) எனக் கூறப்படும்.

காண்ட நுனியில் செடி வளரும் பகுதியான முதல் குருத்து நுனிக்குருத்து (Terminal bud) காணும். காண்டக் கிளைகளின் நுனியில் காணும் இவ்வகைக் குருத்துக்கள் கிளைக் குருத்துக்கள் எனப்படும். நுனிக் குருத்துக்கள் செடியின் வளர்ச்சியில் அதிக பங்கெடுக்கின்றன.

காண்டத்துக்கும் இலைக்காம்புக்கும் இடையுலுள்ள கோணம் கணுவிடுக்கு (Axil) ஒவ்வொரு கணுவிடுக்கிலும் கணுக்குருத்து (Axillary bud) உண்டு. இவையே வளர்ந்து கிளைகளாகும். காண் டத்திலுள்ள இலைகள் முதிர்ந்து பழுத்து உதிர்ந்துவிடும். அப் போது காண்டத்தில் அதன் காப்பு ஒட்டியிருந்த இடம் சற்றுப் பதிந்து தழும்பு (Scar) ஆகத் தெரியும்.

ஒரு செடியின் பொது அமைப்பில் மேலே கூறப்பட்ட உறுப் புகள் உண்டு, இவ்வுறுப்புகள் அமைப்பில் தாவரத்துக்குத் தாவரம் மாறுபட்டுக் காணும். இனி ஒவ்வொரு உறுப்பையும் விரிவாகக் காணலாம்,

(தொடரும்)

கைமுறை அனுபவ வைத்தியம்

"அழகு தவசி"

நீர்க்கோவை மாத்திரை: கப்பு மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், இவை சம இடை. பொரிகாரம், சாம்பிராணி, மிளகு, சுக்கு, சாதிக்காய், முன் சொன்னதில் பாதி இடை, ஓமம், இலவங்கம், கற்பூரம் இவை கால் பங்கு. இவற்றைப் பொடித்துக் கல்வத்திலிட்டு பழச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து, மிளகு பிரமாணம் மாத்திரை களாகச் செய்து, நிழலில் உலர்த்தி சீசாவில் வைக்கவும். முலைப் பாலில் இழைத்து தலையில் பற்றிட, ஒருத்தலை வலி முதலிய எல்லா வித தலைவலியும் உடனே நீங்கும்.

இலவங்காதி மாத்திரை: இலவங்கம் 6 பங்கு, பொரித்த வெங் காரம் 3 பங்கு, இரச கற்பூரம் 2 பங்கு, இலிங்கம் 1 பங்கு, வாளம் 12 பங்கு. இவைகளை முறைப்படி சுத்தி செய்து, கல்வத்திட்டு பொடித்து, பழச்சாற்றால் இரண்டு சாமமும், தண்ணீரில் இரண்டு சாமமும் அரைத்து குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி யெடுத்து சீசாவில் பதனப் படுத்தவும். குழந்தைகளுக்கு ஒரு மாத்திரை, பெரியவர்களுக்கு மூன்று மாத்திரை வரை, மலை வாழைப் பழம், பேயன் வாழைப் பழத்தில் வைத்துக் கொடுக்க நன்றாக் பேதியாகும். மலச்சிக்கல் தீரும்.

இருமல் மாத்திரை: பச்சை கற்பூரம், சிரகம், கலைக் கொம்பு, கோரோசனை, சந்தனம் சாம்பிராணிப் பூ, வகைக்கு ஒன்றேகால் வராகனிடை, இதனை கல்வத்திட்டுப் பொடித்துப் பேய்ப் புடல், பேய்ப் பீர்க்கன், நெருஞ்சில், வெங்காய விதைகளை இளநீரில் இட்டுக் காய்ச்சிய நீரில் நன்றாக மெழுகுபோல் அரைத்துக் குன்றி யளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். தினம் இரு வேளை விதம், 15 நாட்களுக்கு தக்க அனுபானத்தில் கொடுக்க, இருமல், கயம் தீரும்.

பாலசஞ்சீவி மாத்திரை: திரி கடுகு, வெங்காரம், இலிங்கம், சம இடை, முறைப்படி சுத்தி செய்யவும், கல்வத்திட்டுப் பொடித்து, பழச் சாற்றால் ஒரு சாமம் நன்றாக அரைத்து, பாசிப் பயறில் பாதி யளவு மாத்திரைகளாக உருட்டி, நிழலில் காயவைக்கவும். மாசிப் பத்திரி புட்டவியல் சுரசத்தில், திரிகடுகு கற்கம் சேர்த்து ஒரு மாத்திரை யுடன் கலந்து குழந்தைகளுக்கு தினம் ஒருவேளை கொடுக்கவும். மாந்தம், காஸம், சுரதோடம், வயிற்றோட்டம், பித்த இருமல், வாந்தி இவைகள் தீரும் கோரோசனம் கூட்டிக் கொடுத் தால் சுரம், இருமல், காஸம் முதலியவை தீரும்.

இடிவல்லாதி மெழுகு

சேரும் சரக்குகள் :

இரசம்	1 தோலா	சுக்கு	4 தோலா
வீரம்	½	பரங்கிப்பட்டை	4 ,,
ஓமம்	4	கருப்புக்கட்டி	64 ,,
கடுக்காய்த் தோல்	8	வெற்றிலை	16 ,,
		செங்கோட்டை	45 எண்

1. செங்கோட்டை (சுத்தி) இதனை மூக்கு வெட்டி, எருமைச் சாணத்தின் கரைத்த நீரில் ஏழு தடவை மாறி மாறி வெவ்வாருக எரித்தெடுப்பதால் சுத்தியாகிறது.

2. மற்றச் சரக்குகளை கிரமப்படி சுத்தி செய்து எடுத்துக் கொள்ளவும்.

செய்முறை : செங்கோட்டை, சுக்கு, ஓமம் கடுக்காய் தோல் பரங்கிப்பட்டை, ஆகியவைகளை ஒன்றன் பிறகு ஒன்ருக நன்ருக இடித்து சல்லித்து பொடி செய்துகொண்டு கடைசியில் கருப்புக் கட்டியும் சேர்த்து கல்லுரலில் மர உலக்கையால் இடித்தல் வேண்டும். வேருக வெற்றிலையையும் இரசம் வீரத்தையும் இடித்து கல்லுரலிலிருக்கும் சரக்கோடு சேர்த்து 3 ஜாமம் நன்ருக மெழுகு பதம் ஆகும் வரையில் இடித்தல் வேண்டும். ஜாடியில் இடுவதற்கு முன்பு ¼ படி ஆமணக்கெண்ணெய் விட்டு கலந்து பிசைந்து பிறகு ஜாடியில் அடைக்கவும்.

உபயோகிக்கும் விதம் : பெருஞ்சுண்டைய ளவு வாழைப் பழத்தில் பொதிந்து நோயாளனின் தேக பல வயதிற்குத் தக்கபடி கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : கிரந்தி, பகந்திரம், ஆருப் புண், ஆருக் கட்டிகள், குட்டம் ஆகியவைகள் தீரும், மற்ற தோலைப்பற்றிய நோய்களுக்கும் கொடுக்கலாம்.

பத்தியம் : மிக கடும் பத்தியம்.

அறிவிப்பு

கவிராஜ் ஈ. எஸ். இராமசாமி சோதிடர், கணித சோதிட மஹாவித்துவான், தமிழ்சித்தர், வைத்திய சரபம்.

எரிசனம்பட்டி அஞ்சல், உடுமலைப் பேட்டை தாலுக்கா 1—6—66 க்குப் பின் பின்கண்ட முகவரிக்கு மாற்றம் :

8. B. பழனியப்ப முதலியார் வீதி,
வெங்கடேசர் காலனி, பொள்ளாச்சி அஞ்சல்,
கோவை மாவட்டம்.

குறட்பாவின் திறப்பாடு

(திரு. வ. பெருமாள். எம். ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.)

(முன் தொடர்ச்சி)

எடுத்துக் காட்டாக

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்ற குறட்பா இவண் நோக்கத்தக்கது. தீயினால் ஏற்படும் காயம் நாளடைவில் ஆறிவிடும் ஆதலால் அதைப் 'புண்' என்று சொன்னார். நாவினால் சுட்ட சொல் ஒருபொழுதும் ஆறாதாகையால் அதை வடு என்று கூறியுள்ளார்.

குறட்பாவிலுள்ள பல்வேறு நயங்களையும் நன்குணர்ந்த நச்சுமனார்.

"எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரின்குறள் வெண்பா"

என்று பாராட்டியுள்ளார்.

பொது விதியும் சிறப்பு விதியும் :

பொதுவாக எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய அறமே பொது அறம் அல்லது பொது விதி எனப்படும், ஆனால் மாந்தர் தம் நிலைக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றவாறு சிற்சில சமயங்களில் பொது அறத்தினின்றும் நீங்கி ஒழுகவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்தகையோர் கடைபிடிக்கும் முறையே சிறப்பு அறம் அல்லது சிறப்பு விதியாகும். இவ்விரு வகையான விதிகளையும் முப்பாலில் சற்று ஆராய்வோம்.

எண்ணும் எழுத்தும் பொதுவாக உலக மக்களுக்கு இரு கண்களாக அமைகின்றன.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

இது பொது விதியாகும். நாட்டை ஆளுகின்ற வேந்தர்களுக்கு இரு கண்கள் என்று சொல்லப்படுவது ஒற்றர்களும் சிறந்த நீதி நூலுமாகும்.

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவை யிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்."

இது சிறப்பு விதியாகும். ஒருவன் தன்னுயிர் நீப்பினும் பிற வுயிரைக் கொல்லாதிருப்பதே தலைசிறந்த அறமாகும்.

" தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை." (பொது விதி.)

மன்னன் கொடியவர்களைக் கொன்று கோலோச்சுவது அவன் கடமையேயாகும். அது பிழையன்று; அரச நீதியே. அச் செய்கை வயலிலுள்ள களையைப் பறித்துவிட்டு பயிரைக் காத்து வளர்ப்பது போன்றதாகும். இது மன்னனுக்குரிய சிறப்பு விதியாகும்.

" கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." (செங்கோன்மை)

மக்கள் ஒருவர்பால் ஒருவர் கண்ணோட்டம் செலுத்துவதே கண்ணிற்கு அணிகலமாகும். அஃதின்றேல் கண் புண்ணாகவே கருதப்படும்.

" கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப்படும்." (கண்ணோட்டம்) இது பொதுவிதி

அரசன மட்டும் கண்ணோட்டமின்றி நடுநிலைமையுடன் முறை செய்யவேண்டும்.

" ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை." இது சிறப்பு விதியாகும்.

புறந் தூய்மை எவ்வாறு நீரால் அமைகின்றதோ அதுபோன்று அகந் தூய்மை, உண்மை பேசுவதினால் அமையும். ஒருவன் தன் நெஞ்சம் அறிந்த ஒன்றை அதற்கு எதிராக பொய்யுரைக்கக் கூடாது. அவ்வாறு பொய் சொல்வானேயானால் அவன் நெஞ்சமே அவனைச் சுடும்.

" தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்." (வாய்மை) இது பொது விதி

ஒரு காட்டின் வழியாக கணவனும் மனைவியும் சென்றுகொண் டிருந்தனர். அவர்களைச் சேண்மையில் கண்ட ஆறலைக் கள்வன் அவர்கள் மாட்டுள்ள பொருளைக் கவர விழைந்தவனாய் அவர்களைப் பின் தொடர்ந்தான். கள்வனின் வருகையை உணர்ந்த அவர்கள் மிகவும் வேகமாக ஏகி பாங்கரிலுள்ள ஒரு முனிவரின் குடிலை யடைந்து கள்வன் பின்தொடர்ந்து வருவதை முனிவருக்கு மொழிந் தனர். முனிவர் அவர்களுக்கு ஆறுதல் அளித்து இல்லத்தில்

இருக்கச் செய்தார். சற்று நேரத்தில் கள்வனும் அங்கு வந்தான். நாலாப் பக்கங்களிலும் பார்த்தான். இருவரையும் காணவில்லை. குடிசையின் வாயிலில் நின்றுகொண்டிருந்த முனிவரைக் கண்டு "முனிவரே, இவ் வழியில் கணவனும் மனைவியுமாக இருவர் சற்று முன் சென்றதைத் தாங்கள் அறிவீர்களோ?" என்று வினவினான். "ஆம், அவர்கள் சற்று முன்பாக இவ் வழியாகச் சென்று விட்டனர்" என்று மாற்றம் அளித்தார். கள்வனும் அவணின்று விரைவாக நீங்கினான். கணவனும் மனைவியும் பாதுகாக்கப்பட்டனர்.

முனிவர் மொழிந்தது முற்றிலும் பொய்யே. முனிவர் பொய் சொல்லியது அவர் தம் நெஞ்சத்திற்கு நன்கு தெரிந்ததொன்றாகும். இருந்தாலும் அவருடைய பொய்யுரையில் நன்மையே விளைந்தது. அதிலும் பிறர்க்கு நன்மை ஏற்பட்டது. ஆகவே அவர் கூற்று பொய்யுரையாக இருந்தாலும் அது வாய்மையாகவே கருதப்படும்.

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்." இது சிறப்பு விதியாகும்.

உடன்பாடும் எதிர்மறையும்

ஒரு கருத்தை கேட்போர் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதியுமாறு செய்வதற்கு இரு வகையான முறையை அறிஞர்கள் கையாளுவதுண்டு. ஒன்று உடன்பாடு; மற்றொன்று எதிர்மறை. இவ்விரு முறையையும் கையாளுவதற்கு மூன்று காரணங்கள் உள. முதலாவதாக சில கருத்துக்களை உடன்பாட்டில் அறிவுறித்தினல் நயம் தரும். வேறு சில கருத்துக்களை எதிர்மறையில் எடுத்து இயம்பினல் பயன்தரும். இரண்டாவது காரணம், ஒரு பொருளை உடன்பாட்டில் முதலில் கூறிவிட்டு அக் கருத்து முற்றும் பெருவிடில் எதிர்மறையில் இயம்புவதுண்டு. மூன்றாவதாக உரைக்க புகும் கருத்தின் உறுதிப்பாட்டைக் குறித்து ஒரேசமயத்தில் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் கூறுவதியல்பு. இந்த மூன்று முறையையும் முப்பாலில் நாம் பரக்கக் காணலாம். 'அன்புடைமை' 'விருந்தோம்பல்,' 'இனியவை கூறல்,' 'செய்ந்நன்றி அறிதல்,' 'அடக்கமுடைமை,' 'ஒழுக்கமுடைமை,' முதலியவற்றை உடன்பாட்டிலேயே கூறுகின்றார். 'பிறனில் விழையாமை,' 'அழுக்காறாமை,' 'வெஃகாமை,' 'புறங்கூறாமை,' 'பயனில சொல்லாமை' முதலியவற்றை எதிர்மறையால் அறிவுறுத்துகின்றார். 'கல்வி கல்லாமை'; 'செங்கோன்மை' 'கொடுங்கோன்மை 'நட்பு,' 'தீ நட்பு,' 'அறிவுடைமை,' 'பேதைமை,' 'பெரியாரைத் துணைக்கோடல்,' 'பெரியாரைப் பிழையாமை,' 'மெய்யுணர்தல்,' 'புல்லறிவாண்மை,' ஆகிய இன்னோரன்ன கருத்துக் கருவூலங்களை ஆசிரியர் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் விளக்குகின்றார்.

இன்சொல்லின் இன்றியமையாமையை இயம்பப் போந்த பெருநாவலர்.

"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்."

என்று தெளிந்த உடன்பாட்டில் உரைக்கின்ருர். மறதியினுல் ஏற்படும் தீமையை,

" அச்சமுடை யார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.',

என்று எதிர்மறையில் கூறுகின்ருர். பயனுடைய சொற்களைக் கூறவேண்டும் என்று உடன்பாட்டிலும் பயனிலாச் சொற்களைப் பேசலாகாது என்று எதிர்மறையிலும் ஒரே குறட்பாவில் விளக்குகின்ருர்.

" சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

" பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல்
மக்கட் பதடி எனல்,"

இக் குறளில் முதலடியிலுள்ள 'எனல்' என்ற சொல் எதிர்மறைப் பொருளைத் தருகின்றது. அதாவது பயனற்ற சொல்லைப் பாராட்டிப் பேசுகின்றவனை மகன் என்று சொல்லற்க என்பது முதலடியின் பொருள். ஈற்றடியிலுள்ள 'எனல்' என்ற சொல் உடன்பாட்டுப் பொருளில் உள்ளது. அதாவது அவனை மக்களுள் பதர் என்று சொல்லுக என்பது பொருள். இக் குறட்பாவிலுள்ள 'எனல்' என்ற சொல்லை உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் வள்ளுவனுர் வழங்கி யிருப்பது ஆசிரியருடைய சொல்லாட்சிக்கும் பொருளாட்சிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. ஆசிரியருடைய இத்தகைய சொல்லாட்சியும் பொருளாட்சியும் பனுவல் முழுவதும் சிறந்து மிளிர்கின்றன.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் :

தமிழகத்தில் நுண்மாண் நுழைபுல மிக்க புலவர் பலர் வாழ்ந்தனர். ஆனுல் அவர்கள் எல்லோரையும்விட திருவள்ளுவனுர் தலைசிறந்து இற்றைக்கும் இவ் வையகத்தில் புகழுடன் விளங்குகின்ருர் என்ருல் அதற்கு மூலகாரணம் வையத்தார் உள்ளமெல்லாம் ஒன்றே முக்கால் அடியால் ஓர்ந்து அளந்த ஒப்பற்ற திறமையே யாகும். எனவே ஒரு கருத்தைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் அறிவுத் திறமையில் வள்ளுவருக்கு இணை வள்ளுவரே எனறு பகர்ந்தால் அது சற்றும் மிகையாகாது.

கல்வியை வெள்ளம் அடித்துக்கொண்டு போகாது. வெந்தணிலில் வேகாது. ஆறலைக் கள்வரால் கவரமுடியாது. பிறர்க்கு வாரி வழங்க வழங்க மைந்தர்கள் வாய் வைத்துணச் சுரக்கும் தாய் முலை ஒண்பால் போன்று பெருகுமேயன்றி குறையாது. செயற்கையாலோ அல்லது இயற்கையாலோ எக் காரணத்தைக் கொண்டும் அழிக்க முடியாது. இவ்வளவு கருத்தையும் உள்ளடக்கியே வள்ளுவனுர் கல்வியை சாதாரணச் 'செல்வம்' என்று கூருது 'கேடில் விழுச் செல்வம்' என்று கூறுகின்ருர். கல்வியைத் தவிர உலகத்தில் என்னென்ன செல்வங்கள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் மாடல்ல என்ற ஒரே சீரில் செப்பிவிடுகின்ருர். (தொடரும்)

ஙிஜானந்த போதம்

(சித்த வைத்தியர் தில்லை ஆர். விஜயன் பி. ஓ. எல்.
சூளை, சென்னை-7)

(முன் இதழ் தொடர்ச்சி)

ஆச்சுதே அறி வொன்றின் விசாரணையே யனைத்தையுமே பார்த்திருந்து வகண்டந்தன்னில் கோச்சுதே குருவாகித் தத்துவங்களாகி கொடிய தீவினையு நல்வினையுமாகிப் போச்சுதே பெண்ணுணுய் பிரபஞ்சமாகிப் புகழுறிய நிர்குணமாய் நிர்மலமுமாகி தீச்சுதே சிவமாகிச் சீவனாகிச் செஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்தவாரே.

இவ்வித விசாரணைகளையறிந்து நடப்பதே சாலச் சிறந்தது. இதை விடுத்து உண்மை நிலை உணராது தானும் கெட்டு தன்னை நம்பியவர்களையும் பற்பல வழிகளிலிழுத்துச் சென்று கெடுப்பாருமுளர்.

எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்குமொன்றாய் முட்டித் ததும்பி முளைத்தோங்கும் சோதியை கட்டிச் சுருட்டி கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார் பட்டப்பகலை இரவென்று கூறிடும் பாதகரே, என்று, இருப்பதில் என்ன பயன்.

ஐயமின்றி தெய்வத் திரு உருவை தியானித்தால் அது அரு உருவை தியானித்தால் அட்ட மூர்த்தியுமாம், பொய்யா விரண்டையும் தவிர்த்து தானே தானாக இருந்திடில் பூரணமாம், சீவனெதிர்ப் பொருந்துமதுவா மின்மையனுருமனம் விடயத்தாசையுற்றேயதுவாய் மரண செனனமும் விளைந்தவா ரேதென்றேயுணர்ந்து மெய்யறிவே தானாகப் பாவித்தாலதுவாய் விளங்குவார், அவரே பிறப்பறுத்திருப்பர். மெய்ப் பெருளோடு கலப்பர்.

ஐயுணர் வெய்திய கண்ணும் பயனின்றே மெய்யுணர் வில்லாதவர்க்கு.

இனி வாரசரம் என்ன • அதன்பயனென்ன என்பதையும் கவனிப்போம், நம் முன்னோர்கள் எந்த காரியங்களையும் வெற்றிகரமாகவே செய்து முடித்தனர். அதர்க்குள்ள முக்கிய காரணம் இந்தச் சரவிபரங்களறிந்து அதன் அப்பியாசங்களை செய்து ஆன்ம சக்தியின் பலத்தையும் கொண்டதே காரணமாகும். ஆகையால் காலையில் நாம் தூங்கி எழுந்த உடன் சுவாசம் எந்தக் கலையில் நடக்கின்றது என்பதை கவனித்து முறைப்படி நடவாமல் மாறி நடந்தால் அதை அப்பியாசத்தினால் முறைப்படி மாற்றிக்கொள்வதும் நம் முன்னோர்களின் வழக்கமாகும். அதன் இயற்கை முறையை கவனிப்போம்.

ஞாயிறு, செவ்வாய், சனி, நாட்களில் வலது நாசியில் சூரிய கலையாகவும், வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில், இடது நாசியில் சந்திர கலையாகவும், பூர்வ பக்ஷம் (வளர்பிறை) வியாழக்கிழமை சந்திர கலையும், அமரபக்ஷம் (தேய்பிறை) வியாழக் கிழமை சூரிய கலையும், காலை 4 மணி முதல் சுமார் நான்கு மணி நேரம் நடந்து

பிறகு கலை மாறி மாறி நான்கு மணிக்கொருமுறை நடக்கும். இவ விதம் நடந்தால் தனது காரியங்களனைத்தும் சித்தியாகும். இவ் வகையில் நடவாமல், சூரியன் நடக்க வேண்டிய தினம் சந்திரனும் சந்திரன் நடக்க வேண்டிய தினம் சூரியனும் நடந்தால் கீழ் கண்ட பலன்கள் நடக்கும்.

ஞாயிறு, சந்திரன் நடந்தால் சளி, இருமல் உண்டாகும், திங்கள், சூரியன், நடந்தால் சலதோஷமும், சுற்றத்தாருக்கு கேடு, செவ்வாய், சந்திரன், சுரம், சண்டை சச்சரவு நடக்கும், புதன் சூரியன் நீரேற்றம், தலைக் குத்தல், பல தீங்குகள், வளர்பிறை வியாழன், சந்திரன் நடந்தால், தேகம் நோகுதல் உண்டாகும், வெள்ளி, சூரியன் நடந்தால் கண் காது நோய் உண்டு, வெளியூர் பிரயாணம், சனி சந்திரன் சீதள சன்னியாகும்.

இவ்வாறு பேதமாக நடப்புதை யுணர்ந்து மேற்கண்ட நோய்கள் வராதவாறு தடுக்கவும், வந்த நோய்களை சர அப்பியாசத்தைக் கொண்டு பேதப்பட்ட சுவாசத்தை மாற்றியமைத்து, நோய் வராமல் தடுத்தும், நோயை நீக்கவும் செய்வர் நம் முன்னோர்கள். இதை நமது சித்த வைத்தியர்கள் உணர்ந்து நடப்பது மிக மிக முக்கியமானதென்றே என் கருத்து.

இன்னும் ஐம்பூதங்களையும் அதன் சுவைகளையும் ஆராயு மிடத்து கீழ் கண்டவாறு நிச்சயித்திருக்கிறார்கள்.

அதாவது :– சந்திர, சூரிய, நிருகலையினும் ஐம்பூதங்கள் நடப்ப துண்டு. பிரிதிவ் நிறம் பொன்மை அவை இலுப்பு, அப்பு நிரம் வெண்மை, சுவை துவர்ப்பு தேய்வு நிறம் செம்மை, அவை உவர்ப்பு, வாய்வு நிறம் கருமை, சுவை புளிப்பு, ஆகாயம் நிறம் படிகம் சுவை கசப்பு. இவ்வகைப் பிரிவுகளாக இருக்கிறது. தவிர வளர் பிறை தேய்பிறைக்களில் கிழமை, கிரகங்களின் ஐம்பூதப் பிரிவு களையும் ஆராயுமிடத்து வ்ளர்பிறை நாட்களில் வியாழன் பிரிதிவு, சுக்கிரன் அப்பு, செவ்வாய் தேய்வு, புதன் வாய்வு-சனி ஆகாயம். இவ்விதமாகக் கொள்ள வேண்டியது.

இந்த ஐம்பூதங்களும் பஞ்ச பக்ஷிகளாகக் கொண்டு அதன் தொழில் முறையை ஆராய்ந்து செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தனர் நம் முன்னோர்கள். இந்த பஞ்ச பக்ஷிகளின் மாந்திரிகம் என்று உண்டு இதை மிக கூர்மையாக கவனித்து தெரிந்து தெளிந்து அஷ்டகர்மங்களையும் செய்தனர். இதற்கு மிக மிக நிதானம் தேவை இத்தன்மைகளை நான் எனது அனுபவத்திலும் கண்டுள்ளேன் இதன் மர்மங்களை ஓரளவு எழுதுகிறேன் ஆனல் மற்றவைகளை செய்வது உணர்ந்து செய்ய வேண்டியது கடமையாயினும் பஞ்ச பக்ஷி மாந்திரிகத்தை செய்வது உணர்ந்து தெளிந்து ஆசிரியரின் உதவி பெற்று பயின்று பின்புதான் செய்ய வேண்டு மென்று வாசகர்களை பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இதில் அந்த மாந்திரீக விஷயங்களை குறிப்பிடா விட்டாலும் சிலர் அச்சிட்ட

புத்தகங்களை நம்பித் தவறவேண்டாமென்பதற்காகவே இதைக் கூறினேன்.

இதன் பொதுப் பிரிவும் பொதுவான பலாபலன்களையும் காண்போம்.

ஞாயிறு ஆந்தையாகிய அப்பும், திங்கள், செவ்வாய், வியாழன் காகமாகிய தேய்வும், புதன் வல்லூராகிய பிரிதீவும், வெள்ளி கோழியாகிய வாய்வும், சனி மயிலாகிய ஆகாயமும், பூதியாமாக நடக்க மிக உத்தமம், இதை நாடியிலிருந்து இப்பிரிவை நாம் உணரலாம்.

பூதியங்கள் பிரிதீவு அப்பு நடந்தால் சத்வகுணமாயுரும். தேய்வு நடந்தால் ராசதமாகிய கோபம், அகங்காரம், பெண்கள் இச்சை முதலியன உரும். வாய்வானது அலைவுரும். ஆகாயம் பரயிச்சையை நாடும். ஆகையால் இவைகளையும நாடியின் மூலம் இவ் வைம்பூதப் பிரிவுகளை பிரித்துப் பார்த்துக் கொள்ள வேண்டியது.

பொதுவாக சில அப்பியாசங்களையும் அதன் பலன்களையும் பார்ப்போம், காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது அவசரமில்லாமல் சுவாசத்தை சீராக உள்ளிழுத்துக் கொண்டு எழ வேண்டும். ஆகவேண்டிய காரியங்களுக்குப் போகும்போது சூரிய கலையில் பிரிதீவு, அப்பு நடக்கச் சென்ருல் சித்தியுண்டு. சந்திர கலையில் பிரிவு, அப்பு நடக்கச் சென்ருல் தாமதத்தில் பலன் சித்திக்கும். படுக்கும்போது இடது கை கீழ் வைத்து வலது கை மேல் வைத்து கால் நீட்டிப் படுக்க வேண்டியது. அவ்வாறு படுத்து மனதை பலவாறு சிந்தனைகளில் செல்லவொட்டாது சுவாசத்தின் மீது செலுத்தியிருக்க வேண்டும். இவ்வகை அப்பியாசம் செய்து வந்தால் சொற்பன அவஸ்தைகள் நீங்கி அந்தர்முக விவகாரங்கள் விளங்கும். இவ் வகையாக நடப்பது மன்றி ஆகாரமில்லாதிருக்கும் போது பசி அதிகமாக இருப்பதன்றி மேற்கூறியபடி படுத்திருந்து பார்க்க பசி யெழும்பிய பரமிடம் நன்ருகத் தோன்றும். அமாவாசை தினம் காலை சூரியனை ராகுவும், பருவத்தில் சந்திரனை கேதுவும் மறைக்கும் கிரகணங்களைப் போல் நம்மிடத்தில் ரவி, மதியை ருகு கேது சாயை மறைப்பதால் மனதிற்கு இருளாகிய மாயை மூடப்பட்டது. சந்திரன் மனதினிடத்திலும் சூரியன் கண்களிடத்திலுமிருப்பதால் ரவியிடம் மதியைச் செலுத்த மதிக்கு கிரண சக்திகள் குறைவுபடாமல் அறிவு உதயமாகும்.

நம் உடற்கூறின் பொது உண்மையை ஐம்பூதப் விரிவுகளாகப் பார்க்கும்போது ஆகாயமும் வாய்வும் கலந்திருக்கிறது. மண்ணும் நீரும் கலந்திருக்கிறது. அக்கினி மத்தியமாக நிற்கிறது. மாமிச, உதிரநீர் ஒன்ருயிருக்கிறது. சரமாகிய வாய்வு ஆகாய வெளியில் சம்மந்தமாயிருக்கிறது அக்கினி பொது நிலையாய் நிற்கிறது.

இவைகளை நன்குணர்ந்துதான் நமது முன்னோர்களாகிய சித்தர்கள் தன்னிலே நின்று தானே தானாக அருட்பெரு வெளியிலே கலந்தனர்.

"தானென்ற சித்தர் முதல் முனிரிஷிகள் தன்மயமேதானாகத் தவமே செய்து ஊனென்ற வுடல் வெறுத்து பசியடக்கி உற்றகலை வாசி யென்ற தாரகத்தைக் கொண்டு வானென்ற ஆகாச வெளியில் சென்று மகத்தான சோதியுடன் சோதியானார் யேனென்று வந்தது வும் சோதி சோதி யெங்கும் சிவமயமான சோதிதானே."

சோதியென்ற சோதியிலே சோதியானார்
சூழ்ந்துதடா யண்டமதிலே நன்றாய்ப்பாரு
வோதியதோர் மந்திரகலை சோதியெல்லாம்
யொளிவிளக்காய் நின்றதடா யங்கேபாரு
நீதியுடன் பார்க்கையிலே யண்டந்தன்னில்
நிறைந்து நின்ற நட்சத்திர சோதியெல்லாம்
ஆதியென்ற நாதாக்கள் காந்தி காந்தி
யண்டமதில் சூழ்ந்த தடாயங்கே பாரே.

இவ்வாறாக பார்க்கும்போது ஸ்தூல தேகம் சத்தி, சந்திர ரென்றும் யிதில் உயிர்ப்பாகிய உயிர் சூரியன் சிவமாகும், பிரிதிவு குரு நாசியிடமாக வாசனையறிதலும், அப்பு சுக்கிரர் நாவினிடம் சுவையறிதலும் தேய்வு செவ்வாய் கண்களிடம் பார்வையறிதலும், வாய்வு புதன் சரீரத்தில் வியாபித்து பரிசமறிதலும், ஆகாயம் செவியினிடம் ஒலியறிதலும் இராகு கேது இவ்விரு இரகங்களின் சாயையும் என்னும் குதஸ்தானத்திலும் (ஆசனம்) குய்யஸ்தானத் திலும் (மர்மஸ்தானம்) இருப்பதென மேலோர் முடிபு. கீழ்கண்ட பாடலையும் கவனிக்கும்போது இவைகளை நாம் தெரிந்து கொள்வது மிக அவசியமென்று நன்றாக உணருகிறோம்.

கடின மென்றுதள்ளாதே வாசியோகம்
கண்மூக்கு மத்தியிலே கருதிப்பாரு
துடிமிகுத்த சுழிமுனையி னூடெதாக்கு
சூரியனும் சந்திரனு மொன்றாய்ப் போகும்
குடியிருப்பு சாக்கிரத்தின் கோட்டையாச்சு
கோடான கோடியுகம் வாழலாச்சு
கொடி நிமைக்கு நேரமல்லோ பிரமன்வாழ்க்கை
நுண்ணிமையாய்ப் பார்த்திருந்து நுடங்குவாயே

சாக்கிர பகிர்முக விவகாரங்களிலிருந்து நித்திரை செய்யும் போது சொர்ப்பனத்தில் அனேக விஷயங்களைக் கண்டதாயும் செய்ததாயும். சென்றதாயும், நடத்தியதாயும் பற்பல விதமாக காண்கிறோம். அவைகள் நித்திரை நீங்கிய பிறகு யாதொரு பயனையும் அடையாதவர்களாகின்றோம். அவைகளன்றி ஒரு பெண்ணைக் கூடி போகத்திலிருந்ததாக காண்கின்றோம். அப்படி கண்டு நித்திரை நீங்கிய பிறகு கண்டது கனவென உணருகிறோம் ஆனால் விந்து வெளியானதை கண்கூடாகக் காண்கிறோம்.

(தொடரும்)

ஆங்கில இலக்கியத்தில் திருக்குறட் கருத்துக்கள்

(பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ். தமிழ்ப்பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்)

திருவள்ளுவர்—பிரௌனிங் (ROBERT BROWNING)

மறத்தலும் மன்னித்தலும்

மக்கள் நன்மையும் செய்கிறார்கள், தீமையும் செய்கின்றார்கள். நன்மையை என்றும் நினைக்க வேண்டும். தீமையை அன்றே மறக்க வேண்டும். நல்வாழ்வு வாழ இதுவே வழி.

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று' *(குறள்)*

என்பது வள்ளுவர் வாக்கு. 'மன்னிப்பது நன்று, மறப்பது மிக நன்று' என்று பிரௌனிங் மொழிகின்றார்.

'Good to forgive
Best to forget'

பிறர் செய்த தீமையை அடியோடு மறந்து விட்டால் மன அமைதி ஏற்படும்; வாழ்வில் இன்பம் மலரும். வள்ளுவரும், பிரௌனிங்கும் வாழ்வின் அடிப்படை உண்மையை உரைப்பதில் மொழியால் வேறுபட்டாலும் உள்ளத்தால் ஒன்றுபடுகின்றனர்.

திருவள்ளுவர் - டிக்கன்ஸ் (CHARLES DICKENS)

வரவும் செலவும்

பொருளாதாரத் துறையில் ஒருவனது வாழ்வு சிறக்க வேண்டுமானால் அவன் தன் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்ய வேண்டும். வருவாய் குறைவாக இருப்பினும் சரி. செலவு விரிவடையாமல் இருத்தல் வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து வருவாய்க்குள் செலவு அடங்கிவிட வேண்டும்.

'ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை' *(குறள்)*

வரவுக்கு ஏற்ப செலவு செய்தால் இன்பம் தரும். வருவாயை விட செலவு மிகுதியானால் துன்பம் தரும். இவ்வுண்மையை டிக்கன்ஸ் புள்ளி விவர எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார்.

'Annual income twenty pounds, annual expenditure nineteen, nineteen six annual happiness. Annual income twenty pounds annual expenditure tweuty pounds ought and six, result-misery.

David copperfield.

சிக்கன் வாழ்வே சிறந்த வாழ்வு என்னும் கருத்தை வள்ளுவரும் டிக்கன்சும் மிகத் தெளிவாக உரைக்கின்றார்கள்

திருவள்ளுவர் - தாமஸ் கிரே (THOMAS GRAY)

அறிவும் அறியாமையும்

அறிவுடையாருடன் பேசுங்காலை அறிவுடன் பேசுதல் வேண்டும். பேதைகள் முன் பேசும்போது ஒன்றும் அறியாத பேதையைப் போலவே பேசுதல் வேண்டும். வள்ளுவர் இக்கருத்தை

" ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார் முன்
வான்சுதை வண்ணம் கொளல்!"

என்ற குறளில் இனிது மொழிகின்றார். எங்கு அறியாமை இன்ப நடம் புரிகின்றதோ அங்கு அறிவுடன் திகழ்வது பேதமை என்று தாமஸ் கிரே கூறுகின்றார். இதோ அக்கூற்று :

'Where ignorauce is bliss
It is folly to be wise!'

அறிஞன் பேதையர் குழாத்தில் தன் நுண்மாண் நுழைபுலம் திகழுமாறு ஆழ்ந்த கருத்தை எடுத்து உரைக்குங்கால், அக்கருத்தை அறியும் ஆற்றல் இல்லா அப்பேதையர் கூட்டம், அவ்வறிஞனை இகழ்ந்து வெறுப்பர். நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன் என்ற பழமொழிக் கேற்ப அவ்வறிஞன் காட்சியளிப்பான். இவ்வுண்மையைத்தான் வள்ளுவரும் கிரேயும் உரைக்கிறார்கள்.

திருவள்ளுவர்—கிப்லிங் (KIPLING)

நாவடக்கம்

ஒருவன் எதை அடக்கா விட்டாலும் நாக்கை ஒன்றையாவது அடக்கிக் கொள்ள வேண்டும். நாக்கைக் காக்காவிடில் துன்பம் ஏற்படும். நாவடக்கத்தைக் குறித்து வள்ளுவனார்

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.'

என்ற குறட்பாவில் கூறுகின்றார். மனிதன் தன் நாக்கை மட்டும் அடக்கிக் கொண்டால் அவன் எப்பதவியையும் வகிக்கலாம் என்று கிப்லிங் தம் கவிதையில் பாடுகின்றார். இதோ அப்பாட்டு.

'Man may hold all sorts of posts
If he'll only hold his tongue.'

அடக்க வேண்டிய பொறிகள் பல. அவற்றில் (Pink Dominoes) முதன்மையானது நாக்கு. இவ்வுண்மையை மிகத் தெளிவாக வள்ளுவரும் கிப்லிங்கும் ஒரே குரலில் ஒலிப்பதைப் போல் பாடியிருக்கின்றார்கள். புலன் அடக்கத்தில் நாவடக்கமே சிறந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் திகழ்கின்றது.

திருவள்ளுவர் - கீட்ஸ் (KEATS)

உண்மையே அழகு

புறத்தைத் தூய்மையாக்கி அழகுறச் செய்வது நீர். அகத்தைத் தூய்மைப் படுத்தி எழில்பெறச் செய்வது வாய்மை. புறத்தழகை விட அகத்தழகே ஏற்றது. வள்ளுவர் புறத்தூய்மையையும் அகத் தூய்மையையும் ஒரே குறட்பாவில் குறிக்கின்றார்.

'புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.' (குறள்)

அழகே உண்மை; உண்மையே அழகு என்பதைத்தான் இவ்வுலகத்தில் ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் பாடுகின்றார்.

'Beauty is truth, truth beauty' – that is all
Ye know on earth and all ye need to know.'

—Ode on a Grecian urn.

வாய்மையே அகத்தூய்மைக்குக் காரணம் என்பது வள்ளுவர் கருத்து. அகந்தூய்மையிலிருந்து பிறக்கின்ற அக எழிலுக்குக் காரணம் வாய்மை, வாய்மைக்குக் காரணம் அக அழகு என்று அழகையும், வாய்மையையும் ஒன்றுக் கொன்று காரண காரியமாக உரைக்கின்றார் கீட்ஸ்.

திருவள்ளுவர்—வால்ட் விட்மென் (WALT WHITMAN)

தலைக்கொடை

தலைக்கொடைக்கு எடுத்துக் காட்டாக மருந்து மரத்தைக் காட்டுகிறார் திருவள்ளுவர். மக்கள் பிணியைப் போக்க மருந்து மரம் தன்னிடம் உள்ளவற்றைக் கொடுப்பதற்கு மாறாகத் தன்னையே கொடுக்கின்றது. பெருந்தகையாளன் கொடைப் பண்பும் அத்தகையதே.

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.' (குறள்)

நான் அறவுரையோ, சிறு கொடையோ கொடுப்பதில்லை நான் பிறர்க்கு ஒன்றைக் கொடுக்கும்போது என்னையே கொடுக்கின்றேன்' என்று விட்மென் இயம்புகின்றார்.

"Behold, I do not give lectures or a little Charity
When" I give I give myself"

—Song of Myself

தலைக் கொடையைக் குறித்து வள்ளுவரும் வால்ட் விட்மெனும் உரைக்கின்ற கருத்து ஒன்றே. பிறர்வாழ தான் வாழ்வதே தலைக் கொடையின் பண்பு.

திருவள்ளுவர்—மில்டன் (JOHN MILTON)

இறைவன்

இறைவன் புகழை அடைந்தவரிடத்தில் இருள் சேராது. இருளைத் தரும் வினையும் சேராது. இறைவனின் தூய திருவடியைச் சேர்ந்தவர்கள் நிலை பெற்ற பேரின்பப் பெருவாழ்வு வாழ்வார்கள். இதுவே வள்ளுவர் கருத்து. குறள் (5, 3) மில்டன் இதே கருத்தைத் தன் வேண்டுகோளாக விடுக்கின்றார்.

'What in me is dark
Illumine; what is low raise and support;
That to the height of this great argument
I may assert Eternal providence.
And Justify the ways of god to men.'

—Paradise Lost

(தொடரும்)

Telegram : "GURUCURES." P.B. 22 Phone 248

குரு மருந்துகள்

80 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம்.
ஆங்கிலம் தமிழ் ஆராய்ச்சி முறைகள் கலந்த
அரிய தயாரிப்புகள்

தலைவலி தைலங்களில் மேலானது

குரு தைலம்

பல்பொடிகளில் தலைசிறந்தது

குரு பல்பொடி

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை

குறிப்பு:—போலி பல்பொடிகள் நடமாடுகின்றன
கடைகளில் பல்பொடி வாங்கும் பொழுது
குரு பல்பொடிதானாவென்று
கவனித்து வாங்கவும்.

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்,

குரு மருந்துசாலை :: திருச்சிராப்பள்ளி-1

தபால் பெட்டி 22

சித்த வைத்திய சிறப்பு மருந்துகள்

புது உருவம்

கூஷ்மாண்ட் அல்வா

சரீர புஷ்டி உண்டுபண்ண
மனக்கவலை போக்க
உடல் சூட்டை தணிக்க
உற்சாகம் காட்ட

காற்றுப் போகா டின்களில் வெண்பூசணி மற்ற சரக்குகளும் சேர்க்கப்பட்ட அல்வா.

450 கிராம் டின் ரூ. 4-80

ஸ்பெஷல் பர்பி

தேங்காயின் சத்தும், ஊட்ட சத்துக்களும் சேர்த்து கேக் மாதிரி தயாரிக்கப் பட்டது. ஜீரண சக்தியை வலுப்படுத்தி, நரம்புகளுக்கு ஊட்டமளிக்கும்.

450 கிராம் டின் ரூ. 4-80

வாழைத்தேன்

சித்த வைத்தியத்தின் சிறப்பு உணவு, ஊட்ட சத்துக்களுடன் கூட டியூப்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.

150 கிராம் டியூப் ரூ. 1-95

டாக்டர் ஸ்ரீவாஸ் கெமிக்கல்ஸ்,

பார்மசூடிகல் மானுபாக்சரர்ஸ், நியூட்ரீமெண்ட்ஸ்,
32, கமலாலயம் வடகரை,

திருவாரூர்.

த. பெ. எண். 19 (தஞ்சை மாவட்டம்). தொலை பேசி. 142